ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீ வேங்கடேஶதாஸன் ஸ்ரீ ராகவன் அருளிச்செய்த

# பொமானாப்பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# பொமானாப்பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே

பதம் தீண்ட அரங்கன் புகலார்வம் கொண்டு ⋆
    பெரும் கடலைக் கடந்திவ்விட மடைந்துகந்த வேளை ⋆
பலம் கொண்ட அரவணையான் திருமேனித்துயிலன் ⋆
    பாரினில் போகத்தோருய்ய அரங்கன் பரவியுறை கோயில் ⋆
சலம் கொண்டு பனிபொழியும் தண் விழியோடாங்கே ⋆
    வலம் வந்து ஊர்தியேறும் புன்னகைப் பெண் ஒருத்தி ⋆
தலம்கண்ட எழில் கொண்ட மயிலோடு விளையாடச் சற்றே ⋆
    பொமானாப் பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே ‖ **1** ‖

கண்டமும் இப்பனிமழையும் பவனி வருமெல்லாம் ⋆
    துன்பமுய்யத் திருவுடன் திறன் கொண்டெடுக்கும் ⋆
முன் செய்த வினையறுத்துத் தொண்டனவன் பவமது போக்கிப் ⋆
    பாரினில் போகத்தோருய்ய அரங்கன் பரவியுறை கோயில் ⋆
எத்தடையும் நகும் செம்மல் இசைந்திங்குத்துயில ⋆
    பெண்கொடி தண்விழிப் பெருக்கோடு பசுமை வளம் பொழிய ⋆
மணம் செய்து உறவாடும் மையலாளைப் போற்றச் சற்றே ⋆
    பொமானாப் பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே ‖ **2** ‖

பெரிய ஓர் உருவமதால் பகையனைத்தும் திகைக்க ⋆
    தேவரோடு வானவர்கள் இசைக்க ⋆ இராமன் தன்னை
எண்ணி யவன் மார்திறந்து மால் காட்டும் அநுமனுடன் ⋆
    பாரினில் போகத்தோருய்ய அரங்கன் பரவியுறை கோயில் ⋆

தரணியில் பெரும் செல்வத்துடை யனவன் உறையும் ⋆
நால் மறையும் வேள்விகளும் போற்றும் பெரும் தவத்தோர் ⋆
தலம் கண்டு அவ்வறவோர் விழியோடு உறவாடச் சற்றே ⋆
பொமானாப் பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே ॥ **3** ॥

காலையதனில் பகலவன் விரிக்கக் ⋆ கங்குலவள்
மலையதனில் பனியாடை சுருட்டிப்பதறி முன்னோட ⋆ அலர்மேல்
மங்கையவள் அகம் குளிர்ந்து உலகுடையவன் மார்போடு ⋆
பாரினில் போகத்தோருய்ய அரங்கன் பரவியுறை கோயில் ⋆
மலையடைந்துப் பொன்வேய்ந்த உச்சிதனில் கூடும் ⋆
பெரும் வள்ளல் இந்திரனவன் தொடுத்த பெருமுழக்கம் ⋆
கலியில் வென்ற கோவிந்தன் தன்னொடு உறையாடச் சற்றே ⋆
பொமானாப் பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே ॥ **4** ॥

திருவுடனன்று உட்புகுந்தடைந்த அருளாளா வரத
வேந்தே ⋆ அரியுனைத் தொழப் பவமிருபதுமே நீங்கத் ⋆
தன் நிகரில்லான் முன்னாலிலையில் துயின்ற ஒருபாலகனைப் ⋆
பாரினில் போகத்தோருய்ய அரங்கன் பரவியுறை கோயில் ⋆
உன் பரிவில் ஒளியடைந்து இன்றே கிரிகரி வீழ்ந்து ⋆
உளமதனில் வீடே வேண்டி என் நாவாலும் மொழிய ⋆ முன்
மன்னுபுகழ் வேதியர்கள் போல் கொண்டாடச் சற்றே ⋆
பொமானாப் பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே ॥ **5** ॥

அண்டமில் எந் நினைவுகலும் இவ்வுறுப்புகளும் எல்லாம் ⋆
வாதமும் செய்து இவ்வுதட்டாலே மதம் கொண்டுதிரியும்
என் மனமதடக்கி ⋆ பெண்ணவள் தன்கண்ணால் சாபமது நீக்கிப் ⋆
பாரினில் போகத்தோருய்ய அரங்கன் பரவியுறை கோயில் ⋆

எண்திசையும் புகழ்ச்செல்வன் பெற்றெடுத்த பிராட்டியவள் ⋆
அஞ்சுகுடிக்கொரு சந்ததியாய் இசையவள் பொழிய ⋆
வண்டு பல இசைபாட மயிலாடும் பாங்கை காணச் சற்றே ⋆
பொமானாப் பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே ‖ **6** ‖

நரசிங்கமதாய்ப் பொங்கியெழ அரக்கர் அவுணனையே ⋆
உய்க்கத் தன் நகத்துடன் பெருகித்திரண்டோடுமந்த ⋆
இரத்தம் வாய் வைத்து நன்குறிஞ்சிப் புகலளித்துப் ⋆
பாரினில் பெரும்தோளன் மகிழ்ந்தினிது பரவியுறை கோயில் ⋆
அவுணன் தன் சொல் உகவாச் சிறுவனத் தனயனிடம் ⋆
பெரும் வள்ளலவன் அகமே விரியப்பொழியும் பெம்மான் ⋆
தொண்டர்வாழ் மாமலைமேல் மிகவிரும்பி மறையோதச் சற்றே ⋆
பொமானாப் பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே ‖ **7** ‖

தங்கும் உன் பெரு உடலுள் வானவர்களோடிங்கே ⋆
நாடிவரும் பாவலர்கள் மேவி பலர்பாடிக் கூடித்தொழ ⋆
எங்கும் வெண்ணெயுண்ட கண்ணன் நீயே யென்றுணர்ந்து ⋆ இப் -
பாரினில் போகத்தோருய்ய ஈசனவன் பரவியுறை கோயில் ⋆
இங்கேகும் பெரும் தண் புயலால் பாவைகள் மெல்லிடை குழிய ⋆
கூரையதனில் பெரும்பனி படர்ந்த மாவீடுகலும் குளிர ⋆
புகுந்தானென்றே உணர்ந்து கண்ணனுன் புகழ்பாடச் சற்றே ⋆
பொமானாப் பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே ‖ **8** ‖

விளங்கா உனைத் தமிழ் மறை கொண்டு முறையே யறிந்து ⋆
பேர்ப்பதின்மர் ஆழ்வார்களாய்ந் தெடுத்த பெரியோய் ⋆
அருளிச்செயல் இசைகேட்டு இன்நகர் வந்து உவந்து ⋆
நாள்தோறும் அமர்ந்த வரங்கன் பரவியுறை கோயில் ⋆



prapatti.com sunder kidambi

பெரு உடலில் பனி தழுவப் பால் பொழியும் பசுக்கள் ⋆
வளம் கொண்ட அரும்செல்வம் அடைவிக்கும் ⋆ ஓர்
நம் வண்சடகோபன் சொல் பாங்காய் பரவச் சற்றே ⋆
பொமானாப் பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே ‖ **9** ‖

ஓயாத மறையதனால் பெருவரதன் கண்டெடுத்துப் ⋆
பார்புகழும் இராமாநுசன் பெரும்தேவிக்கும் தங்கைக்கும் ⋆
சலமெடுத்த தனித்தொண்டன் பாங்காக இப்புவியோர் ⋆
பணிந்துய்ய அத்திருவரங்கத்தோன் பரவியுறை கோயில் ⋆
மாறாத பொன் வட்டில் நிறையப்பெருகி விரசா நீர் நிரம்ப ⋆
வைகுந்த நாடுமடைய தன் திருவடிகாட்டித் திரியும் ⋆
பொங்கிய கீர்த்தி இராமாநுசனைப் பணியச் சற்றே ⋆
பொமானாப் பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே ‖ **10** ‖

உத்தமனாம் ஓணத்தான் போற்ற அகமனைத்துமடைய ⋆
தண் எழில் சேர் தேசிகனுமாங்கே யுறைய ⋆
போகமறுத்துத் தொண்டனவனையே ஏற்றப்புகும் ⋆
நெடியபிரான் அமர்ந்தினிதரங்கன் பரவியுறை கோயில் ⋆
கலங்காதித் தரிசனத்தைக் காத்தளித்த பெரியோன் ⋆
கவிதார்க்கிக சிங்கமென எத்திசையும் ஏற்றியம்பும் ⋆
இப்புவியில் நிகரில்லா ஆசான் தாள்பணியச் சற்றே ⋆
பொமானாப் பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே ‖ **11** ‖

நால்வேதமும் வடுக்களும் பவனிவரக் கூடுமெல்லாம் ⋆
அரவங்கள் விரித்தாடச் சற்று ஒளிசிந்தக் கண்டே ⋆
கருளப்புள் பீடமதில் நிறைந்தினிது அவனே யெழப் ⋆
பாரினில் போகத்தோருய்ய அரங்கன் பரவியுறை கோயில் ⋆

காற்றாலன்று அக்கடலலைகள் மோத பெரும்புருவம் விரிய ⋆
நாலொன்பது கணங்கள் நகண ரகணங்களே மொழிய ⋆
மால் நாடும் வாகனமாம் பறவையவன் பாதமே பணியச் சற்றே ⋆
பொமானாப் பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே ‖ **12** ‖

பொங்கு கலிகண்டு அக்கிரகம் ஒன்பதும் முன்னேற ⋆
பதக்கமலம் பற்றியே அவ்வாசான் தனியருளால் பின்னேக ⋆
தங்கமதாம் போகத்தோர் பிறவாமலுய்யப் ⋆ பரமகுருவாம்
வேதாந்த சடகோபன் தொழுதளித்த அவன் பரவியுறை கோயில் ⋆
மாமுனிவன் நாராயணன் அரங்கநாத சடகோபனருளே பெற்று ⋆
பாராலூம் தெய்வங்கள் பொலிக பொலிக என்றுரைத்தேகும் ⋆
தொண்டர் தொண்டனிவனுரைத்த பதின்மூன்றும் வல்லார்கள் ⋆
போகத்தோடுறவாட வடதுருவப் பனிநகரங்கள்
அடைவர்களே ‖ **13** ‖

பொமானாப்பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே முற்றிற்று

ஶ்ரீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே ஶரணம்